பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 07 2025 SUNDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடரில் எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- பஹல்காம் தாக்குதல் சம்பவம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இந்த கூட்டத்தொடரில் எழுப்ப திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

- தமிழகத்தின் கல்வெட்டுகள் தொடர்பாக 30 லட்சம் ரூபாய் செலவில் தேசிய கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளதாக மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

- நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- போர்ச்சுக்கல் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் இந்த கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்து விவாதிப்பதற்காக நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு இதனை தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் உட்பட எந்தவொரு பிரச்சினை குறித்தும், அவை விதிகளுக்கு உட்பட்டு விவாதிக்க அனுமதி அளிக்கப்படும் என்றார்.

கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற ஒத்துழைப்பு அளிக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

நாளை தொடங்கி அடுத்த மாதம் 21-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த கூட்டத்தொடரில் எட்டு மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் பஹல்காம் தாக்குதல் சம்பவம், பீகாரில் மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

<<<<<<>>>>>

தமிழகத்தின் கல்வெட்டுகள் தொடர்பாக 30 லட்சம் ரூபாய் செலவில் தேசிய கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளதாக மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

இன்று மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அகழாய்வுப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

*(Voice Byte - தங்கம் தென்னரசு – 52 Sec.)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக, நோய் பரவல் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தூய்மை நகரங்களுக்கான பட்டியலில் சென்னை 38-ஆவது இடத்தையும், மதுரை 40-ஆவது இடத்தையும் பெற்றிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

வருடந்தோறும் தூய்மைப் பணிகளுக்காக கோடிக்கணக்கில் பணம் செலவிடப்படுவதாக திமுக அரசு கூறி வந்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குப்பைகளின் கூடாரமாக மாநகரங்கள் உருவாகியுள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த நான்கு நாட்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

காரின் டயர் வெடித்ததில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் இரட்டை மாட்டுவண்டி பந்தயம் இன்று நடைபெற்றது.

இரண்டு பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவாரூரில் தனியார் தொண்டு நிறுவனத்தின் சார்பில் புதிய ஆம்புலன்ஸ் சேவையை நகர் மன்றத் தலைவர் திருமதி புவன பிரியா செந்தில் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

திண்டுக்கல் மாவட்டம் கருத்தலக்கம்பட்டியில் மீன்பிடி திருவிழா இன்று நடைபெற்றது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

-----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் திற்பரப்பு அருவிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இன்று அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

போர்ச்சுக்கல் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

Maia-வில் நடைபெற்ற இப்போட்டியின் நீளம் தாண்டுதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------------

Borneo ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் லோகேஷ் சுப்பிரமணியன் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

-------------------

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக விளையாட்டுப்போட்டிகளின் 100 மீட்டர் மற்றும் 50 மீட்டர் நீச்சல் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<END>>>>>